**செ.வெ.எண்:04** **நாள்:01.02.2019**

# பத்திரிக்கைச் செய்தி

மத்திய அரசின் விலை ஆதாரத் திட்டத்தின்கீழ் கடந்த 2017-18ஆம் நிதியாண்டில், ராபி பருவத்தில் விழுப்புரம், கடலூர், திருவண்ணாமலை, நாகப்பட்டினம், தஞ்சாவூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய 6 மாவட்டங்களில், விவசாயிகளிடமிருந்து குறைந்தபட்ச ஆதார விலையில் உளுந்து கொள்முதல் செய்யப்பட்டது.

இதே போல் நடப்பு 2018-19 ஆம் ஆண்டு ராபி பருவத்தில், இத்திட்டத்தின் மூலம் **அரியலூர்,** தூத்துக்குடி, திருநெல்வேலி, திண்டுக்கல், புதுக்கோட்டை, திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் திருப்பூர் ஆகிய 8 மாவட்டங்களைச் சார்ந்த விவசாயிகளிடமிருந்து உளுந்து அரசால் கொள்முதல் செய்யப்படவுள்ளது. அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட குறைந்தபட்ச ஆதார விலையான கிலோ ஒன்றிற்கு ரூ. 56 என்ற அளவில் உளுந்து கொள்முதல் செய்யப்படும். நடப்பு ராபி பருவத்தில் பயிரிடப்பட்டு அறுவடை செய்யப்படும் உளுந்து பிப்ரவரி முதல் ஏப்ரல் 2019 வரை கொள்முதல் செய்யப்படும். அதற்கான தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படும்.

இத்திட்டத்தின் மூலம் பயன்பெற விரும்பும் விவசாயிகள் நிலச்சிட்டா அடங்கல், ஆதார் அட்டை மற்றும் வங்கிக் கணக்கு ஆகிய விவரங்களுடன் ஜெயங்கொண்டம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் முன்பதிவு செய்து கொள்ளவேண்டும்.

**இத்திட்டத்தின் மூலம் கொள்முதல் செய்யப்படவுள்ள உளுந்து** இதர பொருட்கள் கலப்பு - அதிகபட்ச வரம்பு (சதவிகித எடையளவு குவிண்டாலுக்கு) 2%, இதர தானியங்கள் கலப்பு - அதிகபட்ச வரம்பு (சதவிகித எடையளவு குவிண்டாலுக்கு) 3%, சேதமடைந்த பருப்புகள் - அதிகபட்ச வரம்பு (சதவிகித எடையளவு குவிண்டாலுக்கு) 3%, சிறிதளவு சேதமடைந்த பருப்புகள் - அதிகபட்ச வரம்பு (சதவிகித எடையளவு குவிண்டாலுக்கு) 4%, முதிர்வடையாத மற்றும் சுருங்கிய பருப்புகள் - அதிகபட்ச வரம்பு (சதவிகித எடையளவு குவிண்டாலுக்கு) 3%, வண்டுகள் தாக்கிய பருப்புகள் - அதிகபட்ச வரம்பு (சதவிகித எடையளவு குவிண்டாலுக்கு) 4%, ஈரப்பதம் - அதிகபட்ச வரம்பு (சதவிகித எடையளவு குவிண்டாலுக்கு) 12% ஆகிய தரத்தில் இருத்தல் வேண்டும்.

எனவே நடப்பு ராபி பருவத்தில் உளுந்து சாகுபடி செய்துள்ள விவசாயிகள் இத்திட்டத்தில் சேர்ந்து கிலோ ஒன்றுக்கு ரூ.56 வீதம் பெற்றிட அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும், தொடர்புக்கு ஜெயங்கொண்டம் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தினை அணுகி பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**